# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2019.07.15 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## காலவிதிப்பு (திருத்தம்)

**(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தினைத்**
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால்*
*பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஏதேனும் ஆதனத்தின் ஏதேனும் ஈட்டின்மீது ஏதேனும் வருமதியான தொகையினை மீளப்பெறுவதற்கான வழக்கை அல்லது பணக்கொடுப்பனவிற்கான ஏதேனும் முறியை கடன்பட்டோருக்கு வழங்கிய அறிவித்தல் திகதியிலிருந்து பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் காலவிதிப்புக்கு உள்ளாதல் வேண்டும் என்றவகையில் ஏற்பாடுசெய்வதற்காகும்.

ச.வ.- ஓ. 63/2017

**(68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*1.* இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காலவிதிப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

*2.* (68 ஆம் அத்தியாயமான) காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, "விடயத்தில் அத்தகைய காலப்பகுதியின் காலாவதியிலிருந்து பத்து ஆண்டுகளினுள்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரை உள்ள எல்லா சொற்களுக்கும் பதிலாக "விடயத்தில் கடன்பட்டோருக்கு அறிவித்தல் வழங்கிய தேதியிலிருந்து பத்து ஆண்டுகளினுள் தொடங்கப்பட்டாலொழிய அதற்கென வழக்கு எதுவும் நடாத்தப்படற்பாலதாதல் ஆகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

68 ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

*3.* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.